தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 01.07.2013

**விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி**

ஆத்மா திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி ஸ்ரீவில்லிபுத்தூர் வனவியல் விரிவாக்க கோட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

பயிற்சியை தமிழ்நாடு வனத்துறை வனவியல் விரிவாக்கக் கோட்டம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் நீட்ஸ் நிறுவனம் இணைந்து நடத்தின.

நீட்ஸ் நிறுவனத் தலைவர் ராஜகோபால் வரவேற்றார். வனவியல் விரிவாக்க சரக விளம்பர அலுவலர் பசல் முகமது முன்னிலை வகித்தார்.

பயிற்சிக்கு விருதுநகர் மாவட்ட வனவியல் விரிவாக்க அலுவலர் அரசப்பன் தலைமையேற்று பேசுகையில், தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கம் திட்டம் குறித்து விளக்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் ஆறுமுகம் விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்தப் பலன் தரும் மரங்கள் என்ற தலைப்பில் உரையாற்றினார். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அய்யச்சாமி விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் கால்நடைகளும், மர வகைகளும் என்ற தலைப்பில் உரையாற்றினார். உதவி கால்நடை மருத்துவர் ஆனந்தன் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தவல்ல ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் உரையாற்றினார். வனவியல் விரிவாக்க கோட்ட தொழில்நுட்ப உதவியாளர் சாந்தி சுப்புலட்சுமி, பல்வேறு வகை மரங்கள் எவ்வாறு விவசாயிகளுக்கு பயனுள்ளதாகவும், லாபம் தரக்கூடியதாவும் இருக்கும் என்பது குறித்து விளக்கினார்.

பயிற்சியில் சாத்தூர், வெம்பக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு மற்றும் ராஜபாளையம் பகுதிகளைச் சேர்ந்த 55 விவசாயிகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு திட்டங்கள் குறித்த விளக்க கையேடு, விவசாய உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை நீட்ஸ் நிறுவன முதன்மை ஒருங்கிணைப்பாளர் கவிதா செய்திருந்தார்.

**மண்புழு உரம், பஞ்சகவ்யம் தயாரிக்கப் பயிற்சி**

கரூரை அடுத்த நெருரில் விவசாயிகளுக்கு, மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு மண்புழு உரம், பூச்சிக்கொல்லி மருந்தான பஞ்சகவ்யம் உற்பத்தி குறித்த பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

கரூர் உள்ள அரெஸ்ட் நிறுவனம் மூலம் நெரூரில் உள்ள 5 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 60 பெண்கள் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் குழுவில் உள்ள 45 பெண்கள், 7 விவசாயிகள் ஆகியோருக்கு மண்புழு உரம், பஞ்சகவ்யம் தயாரிப்புப் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.
கோபிச்செட்டிப்பாளையத்தில் இருந்து சுப்பரமணி, சகாயராஜ் ஆகியோர் மண்புழு உற்பத்தி செய்ய இடத்தைத் தேர்வு செய்து, குப்பைகளை மக்கவைத்து உரம் தயாரிக்கும் வழிகள், 5 வகையான பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்தான பஞ்சகாவியம் தயாரிக்கும் முறைகளையும் கற்றுக் கொடுத்தனர்.

பயிற்சியில் அரெஸ்ட் நிறுவன ஒருங்கிணைப்பாளர் பாக்கியம், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**"திட்டமிட்ட விவசாயத்தில் அதிக விளைச்சல் பெறலாம்**

உரிய திட்டமிடலுடன் விவசாயம் மேற்கொண்டால் அதிக விளைச்சல் பெறமுடியும் என்றார் மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எம். விஜயகுமார்.

புதுக்கோட்டை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான விவசாயிகள் கலந்துரையாடல் முகாமில் அவர் பேசியது:

பழங்காலம் முதலே கண்மாய்கள் மற்றும் ஆயிரக்கணக்கான குளங்களை ஒருங்கிணைத்து சிறப்பான சாகுபடி முறை இங்கு மேற்கொள்ளப்பட்டது. விவசாயத்தை திட்டமிட்டு முறையாக மேற்கொண்டால் நல்ல விளைச்சலை பெறமுடியும். தோட்டப் பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் அதிக வருமானத்தையும் மனித உடலுக்குத் தேவையான சத்துக்களையும் பெறமுடியும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையின் மூலம் பழங்கள், காய்கறிகள், மூலிகைப் பயிர்கள் சாகுபடித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வேளாண் கல்லூரி மாணவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும் வயல்வெளிகளில்தான் கள அறிவைப் பெறமுடியும்.

தற்போது விவசாயம் படிக்கும் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. பெருகி வரும் தகவல் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துவது அவசியம் என்றார் விஜயகுமார்.

முன்னோடி விவசாயி ஜி.எஸ். தனபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உளவியல் வல்லுநர் கோமதி, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் எல். பிரபாகரன், முன்னோடி விவசாயிகள் எஸ்.வி. காமராஜ், ஏ. கோபாலகிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் எம். மேகலா உள்ளிட்டோர் பேசினர். மாவட்டத்தின் தற்போதைய விவசாய நிலை மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

**உணவு மானியத்திற்காக ரூ. 4900 கோடியை முதல்வர் ஒதுக்கியுள்ளார்**

தமிழக முதல்வர் ஜெயலலிதா நிகழாண்டில் உணவு மானியத்திற்காக ரூ. 4900 கோடியை ஒதுக்கியுள்ளார் என்றார் தமிழக வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

பட்டுக்கோட்டையில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற அதிமுக அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் மேலும் அவர் பேசியது:

தேர்தல் நேரத்தில் தமிழக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் முதல்வர் ஜெயலலிதா கடந்த 2 ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ளார். இன்றைக்கு மற்ற மாநில முதல்வர்கள், தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு முற்போக்கான திட்டங்களை தங்கள் மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றனர்.

நிகழாண்டில் உணவு மானிய திட்டத்திற்காக ரூ. 4,900 கோடியை முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கீடு செய்துள்ளார். ஏழை மக்களுக்கு விலையில்லா அரிசி, நடுத்தர மக்களுக்கு மலிவு விலையில் தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

விரைவில் 2 லட்சம் பேருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்படவுள்ளது. நடப்பு ஆண்டில் தமிழகத்தில் 2 கால்நடை மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பொறியியல், கலை, அறிவியல், பாலிடெக்னிக் கல்லூரிகள் என புதிதாக 53 கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழகம் மேலும் வளர்ச்சி பெற வேண்டுமானால் வரும் மக்களவைத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் அதிமுகவை வெற்றி பெறச் செய்து, தமிழக முதல்வர் ஜெயலலிதாவை பிரதமராக்க வேண்டும் என்றார் அமைச்சர்.

கூட்டத்துக்கு முன்னாள் எம்எல்ஏ பி.என். ராமச்சந்திரன் தலைமை வகித்தார். அதிமுக கொள்கைப் பரப்பு துணைச் செயலர் நாஞ்சில் சம்பத், விவசாயப் பிரிவு தலைவர் துரை. கோவிந்தராஜன், சட்டப் பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி, எம். ரெத்தினசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**அன்னவாசலில் ஜூலை 16-ல் சிறுதானிய பயிற்சி**

அன்னவாசலில் ஜூலை 16-ல் சிறு தானியங்கள் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு பயிற்சி நடைபெற உள்ளது.

இதுகுறித்து வம்பன் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் க. வைரவன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

முன்னர் சிறு மற்றும் குறு தானியங்கள் மிக பிரதான உணவாக பயன்பட்டது.

இடைப்பட்ட காலத்தில் இதனுடைய உற்பத்தி மற்றும் பயன்பாடு மிகவும் குறைந்துவிட்டது. இதனால் உடல் ஆரோக்கியம் குறைந்து இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் நோய் எதிர்ப்பின்மை அதிகரித்து விட்டது.

இக்குறைபாட்டை தவிர்க்க சிறு மற்றும் குறு தானிய உற்பத்தியை உயர்த்தும் திட்டம் உள்ளது.

மேலும், இவை உணவு தொழிற்சாலைகளில் மூலப்பொருளாகவும் மாறிவருகிறது.

எனவே உழவர்களின் வருங்கால பயிர் சிறு மற்றும் குறு தானியங்கள் என்பதை வழியுறுத்தி செயல்விளக்கம் மற்றும் பயிற்சி ஜுலை 16-ல் அன்னவாசல் அருகே ஜி.வி.என். டிரஸ்டின் பயிற்சி வளாகத்தில் நடைபெற உள்ளது.

இதில் பதிவு செய்த 100 முன்னோடி விவசாயிகள் பங்குபெற உள்ளார்கள். அதோடு ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கு கொள்ளலாம். தொடர்புக்கு: 04322 290321.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 38.83 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 38.83 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 38,930 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,016 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**இறால் பண்ணை பதிவை புதுப்பிக்க விண்ணப்பிக்கலாம்**

இறால் பண்ணைப் பதிவைப் புதுப்பிக்க விண்ணப்பிக்கலாம் என கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் மாவட்ட அளவுக் குழுத் தலைவரும், மாவட்ட ஆட்சியருமான கா. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள இறால் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பதிவு சான்றைக் கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டத்தின்படி பதிவு சான்று

வழங்கப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும். பதிவுச் சான்றைப் புதுப்பிக்க விண்ணப்பப் படிவம் எண் 3-ஐ நிறைவு செய்து பதிவுச் சான்றின் காலம் காலாவதியாகும் தேதிக்கு இரு மாதங்களுக்கு முன்பே விண்ணப்பிக்க வேண்டும்.

இந்தப் படிவத்தை நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நீர்வாழ் உயிரின வளர்ப்பு மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திலோ அல்லது கடல் சார் நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் ஜ்ஜ்ஜ்.ஸ்ரீஹஹ.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற இணையதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**630 ஹெக்டேரில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கத் திட்டம்**

நாகை மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண் துறை சார்பில் 630 ஹெக்டேர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நுண்ணீர்ப்பாசன சிறப்பு முகாமில் அவர் பேசியது:

குறைந்த அளவு தண்ணீர், குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்கள், குறைவான மின் சக்தி ஆகியவற்றைக் கொண்டு குறைந்த செலவில், அதிக பரப்பில் சாகுபடி மேற்கொள்ள நுண்ணீர்ப் பாசனம் மிகவும் அவசியமாகிறது.

பழப்பயிர்கள், காய்கறிப் பயிர்கள், மலர் பயிர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களுக்கும், தென்னை, கரும்பு போன்ற வேளாண் பயிர்களுக்கும் சொட்டு நீர்ப் பாசனமும், பயறு, எள் போன்ற பயிர்களுக்குத் தெளிப்பு நீர்ப் பாசனமும் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

நிகழாண்டில், நாகை மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் 230 ஹெக்டேர் பரப்பிலும், வேளாண் துறை மூலம் 400 ஹெக்டேர் பரப்பிலும் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு, குறு விவசாயி என்பதற்கான சான்று, கணினி சிட்டா, கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட அடங்கல் நிலத்தின் வரைப்படம் மற்றும் நீர், மண் பரிசோதனை விவர அட்டை, குடும்ப அட்டை நகல், விவசாயிகளின் புகைப்படம் ஆகியவற்றை இணைத்து விண்ணப்பித்து, சிறு, குறு விவசாயிகள் 100 சதவீத மானியத்தில் நுண்ணீர்ப் பாசனம் அமைத்துக் கொள்ளலாம்.

சிறு, குறு விவசாயிகளுக்கு நன்செய் பயிருக்கு ஒரு ஹெக்டேர் பரப்பிலும், புன்செய் பயிருக்கு 2 ஹெக்டேர் பரப்பிலும், இதர விவசாயிகளுக்கு 5 ஹெக்டேர் பரப்புக்கும் மானியத்துடன் நுண்ணீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படும்.

நாகை மாவட்டத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து தங்கள் பகுதிக்குரிய உதவி வேளாண் அலுவர்களிடம் ஒப்படைத்துப் பயன் பெறலாம் என்றார் ஆட்சியர் து. முனுசாமி.

மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் (பொறுப்பு) கோ. கணேசன், வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கால்நடை சிகிச்சை முகாம்**

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த கடிநெல்வயல் கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் கடிநெல்வயல் ஊராட்சி இணைந்து நடத்திய இலவச முகாமுக்கு ஊராட்சித் தலைவர் மலர்விழி தலைமை வகித்தார்.

மருத்துவர்கள் மீனாட்சிசுந்தரம், மஞ்சுளா,விஜயராகவன்,சமூக ஆர்வலர் தமிழழகன் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் 974 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

**அம்மா, உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெறும் இடங்கள்**

அரியலூர் மாவட்டத்தில் அம்மா திட்ட முகாம், உழவர் பாதுகாப்பு திட்ட முகாம்கள் செவ்வாய்க்கிழமை (ஜூலை 2) நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

முதியோர் ஓய்வூதியம், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனைப் பட்டா, உழவர் பாதுகாப்பு அட்டை,பிறப்பு இறப்பு, ஜாதி சான்றிதழ் ஆகியவற்றுக்கு தீர்வு காணப்படும் அம்மா திட்ட முகாம் ஜூலை 2-ம் தேதி அரியலூர் வட்டம் கடுகூர், கரைவெட்டி, அயன் ஆத்தூர், கீழகாவட்டாங்குறிச்சி, ஜயங்கொண்டம் வட்டம் தா.சோழங்குறிச்சி (தெற்கு), ஜயங்கொண்டம், திருக்களப்பூர், வாரியங்காவல், சாத்தம்பாடி உள்ளிட்ட கிராமங்களில் நடைபெறுகிறது.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர.. இந்தத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலி தொழிலாளர்கள் ஆகியோருக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம், நலிவடைந்த விவசாய கூலித் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம், விபத்து நிவாரண உதவித்தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

உழவர் அட்டை இல்லாதோர் இத்திட்டத்தில் சேர உடையார்பாளையம் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் ஜூலை 2-ம் தேதி, ஜயங்கொண்டம் விஏஓ அலுவலகத்தில் ஜூலை 3-ம் தேதி நடைபெறும் முகாம்களில் பங்கேற்கலாம்.

**குமரி மாவட்டத்தில் புத்துயிர் பெறும் மழைநீர் சேகரிப்புத் திட்டம்செ. சுரேஷ்குமார்**

அண்மைக்காலமாக மறக்கப்பட்டும், பராமரிப்பின்றியும் காணப்பட்ட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மீண்டும் கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்துயிர் பெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக மாவட்டத்திலுள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வுப் பேரணிகள் சில வாரங்களாக நடத்தப்பட்டு வருகின்றன.

குறைந்து வரும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் நோக்கில் கடந்த 2001-ம் ஆண்டு முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் கட்டாய மழைநீர் சேகரிப்புத் திட்டம் என்ற திட்டம் நடைமுறைக்கு வந்தது. இதையடுத்து வீடுகள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் என அனைத்து கட்டுமானப் பகுதிகளிலும் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டன. வீடுகள், கட்டடங்களின் மேற்கூரைகளிலிருந்து வெளியேறும் மழைநீர் இதற்காக தயார் செய்யப்பட்ட குழாய் அல்லது அமைப்பு மூலம் தரைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் சேரும் வகையில் மழைநீர் சேகரிப்புத் திட்ட கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன.

இதுதவிர தெருக்களில் மழைநீர் திரண்டுவரும் பகுதிகளை தேர்வு செய்து, அப்பகுதிகளிலும் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டன. இதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது ஆய்வுகளில் தெரியவந்தது.

இந்நிலையில் இம்மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு தகவல் மையங்கள் கடந்த சில ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. பெரும்பாலான வீடுகள் மட்டுமன்றி அரசு அலுவலகங்கள், பள்ளிகளில் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் பராமரிப்பின்றி காணாமல் போய்விட்டன. சில கட்டமைப்புகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டிக்குச் செல்லும் குழாய்கள் சேதமடைந்துள்ளன. சில பகுதிகளில் மழைநீர் சேகரிப்புத் திட்ட கட்டமைப்புகள் மழைநீரை உறிஞ்சும் தன்மையை இழந்து காணப்படுகிறது. இதனால் மழைநீர் சேகரிப்புத் திட்டம் கடந்த சில ஆண்டுகளாக நடைமுறையில் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதி தெருக்களில் அமைக்கப்பட்டிருந்த மழைநீர் சேகரிப்புத் திட்ட கட்டமைப்புகள் பெரும்பாலானவை அடையாளம் தெரியாமல் அழிந்துள்ளன. உள்ளாட்சிகளில் புதிதாக போடப்படும் தார்ச் சாலைகள், சிமென்ட் சாலைகளின் ஓரங்களில் மழைநீர் கட்டமைப்புகளை உருவாக்காமல் சாலைப் பணிகள் மேற்கொள்வதால், மழைநீர் நேரடியாக நிலத்தில் சேரும் நிலை தடுக்கப்பட்டு வருகிறது.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததையடுத்து கடந்த ஏப்ரல், மே மாதங்களில் குளம் உள்ளிட்ட நீர் நிலைகள் வறண்டதுடன், கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் பேரூராட்சிகள் சார்பில் மழைநீர் சேகரிப்பு திட்ட விழிப்புணர்வு பிரசாரம் தொடங்கியுள்ளது. இதன் மூலம் இத்திட்டம் மீண்டும் புத்துயிர் பெறும் என்ற நம்பிக்கை சமூக ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை சீரமைப்பதுடன், இல்லாத இடங்களில் கட்டமைப்புகளை அமைப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் வரும் ஆண்டுகளில் கோடையை சமாளிக்க முடியும் என்கிறார் சமூக ஆர்வலரும், வாறுதட்டு அன்னை தெரசா இளைஞர் இயக்க தலைவருமான என்.எம். பிரேம்ராஜ்.

வரும் காலங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதை தடுக்க மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அரசு கட்டாயமாக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகத்தின் வட மாவட்டங்களில் இன்று பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழகத்தின் சில இடங்களிலும் மழை பெய்யக் கூடும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிக்கு அருகில் உள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. அதேவேளையில், வெப்பச் சலனம் காரணமாக மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி மற்றும் உத்தரமேரூர், சிவகாசி, நெய்வேலி உள்ளிட்ட இடங்களில் சனிக்கிழமை மாலையிலிருந்து மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், சேலம், கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், கரூர், திருச்சி உள்ளிட்ட இடங்களில் திங்கள்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிவரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி - 100, உத்தரமேரூர் - 60, திருவள்ளூர் மாவட்டம் சோழவரம், எண்ணூர், செங்குன்றம் - 30, கடலூர், சிவகாசி, காஞ்சிபுரம் மதுராந்தகம், சிவகங்கை - 20.

**விவசாயிகள் கடன்தொகையை செலுத்த அவகாசம் வழங்க வேண்டும்**

மாநில அரசு வழங்கியது போல, மத்திய அரசும் வங்கிகளில் விவசாயிகள் கடன் தொகையை செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என திருச்சி தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி வலியுறுத்தியுள்ளது.

திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கு பாடுபடுவது, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளை கண்காணிக்க கிராம அளவில் கண்காணிப்பாளர்களை நியமிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் சுப. சோமு தலைமை வகித்தார். மாவட்ட நிர்வாகிகள் புலியூர் ஏ. நாகராஜன், கோபால்சாமி, கணேசன், பிச்சை, சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல் போக சாகுடிக்கு ஜூலை முதல் வாரத்தில் தண்ணீர் திறந்து விடப்படுமா**

கிருஷ்ணகிரி அணையிலிருந்து நிகழாண்டு முதல் சாகுபடிக்கு ஜூலை முதல் வாரத்தில் தண்ணீர் திறந்துவிடப்படுமா என் விவசாயிகள் எதிப்பார்ப்பில் உள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காவேரிப்பட்டணம், பாரூர், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில் நெல் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இந்த பகுதிகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் நெல் களஞ்சியம் எனவும் அழைக்கப்படுகிறது.

மாவட்டத்தில் ஒசூர் பகுதியை தவிர்த்து மீதமுள்ள கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், போச்சம்பள்ளி, நாகரசம்பட்டி, பாரூர் ஆகிய பகுதிகளில் அணை நீரை நம்பியே விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

இதில் கிருஷ்ணகிரி அணை வலது மற்றும் இடதுபுற கால்வாய்களில் திறந்துவிடப்படும் தண்ணீர் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், நாட்டாண்மை கொட்டாய், செப்ட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஹள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ரஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஅள்ளி, நாகோஜனஅள்ளி, ஜனப்பர்அளி, பையூர் ஆகிய பகுதிகளில் உள்ள 9012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

மேலும், பாரூர் பெரிய ஏரியில் இருந்து கிழக்கு பிரதான வாய்க்கால் மற்றும் மேற்கு பிரதான வாய்க்கால்கள் மூலம் திறந்து விடப்படும் தண்ணீர் மூலம் பாரூர், அரசம்பட்டி, பென்டரஹள்ளி, கீழ்குப்பம், புலியூர், கோட்டப்பட்டி, ஜிங்கல்கதிரம்படடி, தாதம்பட்டி, விருப்பம்பட்டி ஆகிய கிராம பகுதிகளில் உள்ள சுமார் 4 ஆயிரத்து 750 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறுகிறது.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்துபோனதால் அணைக்கு நீர் வரத்து இல்லாமல் 2012 ஆண்டு ஜூலை மாதம் தண்ணீர் திறந்து விடமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் முதல் போக சாகுபடி செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகள் கடந்து ஆண்டு தள்ளப்பட்டனர். இதன் காரணமாக மாவட்டத்தில் நெல் சாகுபடி பெரிய அளவில் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போது பருவ மழை தொடங்கி உள்ளதால் இப்பகுதி விவசாயிகள் முதல்போக சாகுபடிக்கு தயார் நிலையில் உள்ளனர்.

மேலும், கர்நாடகா நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை காரணமாக அதிக அளவு மழை பெய்யவதால், அங்குள்ள அணைகளில் நீர் நிரம்பி உபரி நீர் தமிழகத்திற்கு திறந்து விடப்படுகிறது. இதனால் கர்நாடகத்திலிருந்து வரும் தென்பெண்ணை ஆற்றில் அதிக அளவு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதில் கர்நாடகா மாநில எல்லை பகுதியில் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் கெலவரப்பள்ளி அணை அண்மையில் நிரம்பியது. இதையடுத்து, கெலவரப்பள்ளி அணையிலிருந்து ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணைக்கு வருகிறது. தற்போது அணையின் மொத்த கொள்ளளவான 52 அடியில் 42.45 அடி நீர் உள்ளது (ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி). மேலும், அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் கிருஷ்ணகிரி அணையிலிருந்து தண்ணீர் பாரூர் ஏரிக்கு தற்போது திறந்து விடப்பட்டுள்ளது.

எனவே, நிகழாண்டு குறித்த காலத்தில் அணை நீர் வரத்து உள்ளதாலும், பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும் அளவு போதுமான தண்ணீர் இருப்பு உள்ளதால் நிகழாண்டில் காலம் தாழ்த்தாமல் முதல் போக சாகுபடிக்கு ஜூலை 1-ஆம் தேதியோ அல்லது முதல் வாரத்திலேயே தண்ணீர் திறந்து விட வேண்டும் என இந்த பகுதி விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

எனவே, விவசாயிகளின் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் உரிய நேரத்தில் தண்ணீர் திறந்து விட பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கால்நடைகளுக்காக கிலோ ரூ.2 விலையில் வைக்கோல் ஆட்சியர் ஜகந்நாதன் தகவல்**

வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்பை அடுத்து கால்நடைகளுக்கு கிலோ ரூ.2 விலையில் வைக்கோல் அளிக்க விரைவில் அரசாணை வர உள்ளதாக ஆட்சியர் டி.ஜகந்நாதன் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டத்தின் சராசரி மழையளவு 900 மில்லிமீட்டரில் கடந்த 2012ஆம் ஆண்டில் 486 மிமீ6 மட்டுமே மழை பெய்துள்ளது. தவிர, காவிரியிலும் போதிய தண்ணீர் திறக்கப்படாததால் மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் 800 அடிக்கும் கீழே சென்றுள்ளதுடன் மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி நிலவுகிறது.

இதன்காரணமாக விவசாயம் பொய்த்து கால்நடைகளுக்கு தீவனங்களுக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தவிர, வெளிச் சந்தையிலும் தீவனங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் கால்நடைகளுக்கான தீவனங்களின் விலை 40 சதவீதம் வரை உயர்ந்தப்பட்டுள்ளது. தீவன விலையுயர்வுக்கு ஏற்ப பால் கொள்முதல் விலை உயர்த்தப்படாததால் கறவை மாடுகள், எருமை களை விற்க வேண்டிய நிலைமை விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், வாரந்தோறும் செவ்வாயன்று புதன்சந்தை பகுதியில் நடக்கும் கால்நடைச் சந்தைக்கு விற்பனைக்கு வரும் கறவை மாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இப்பாதிப்புகளை அடுத்து விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தீவன உற்பத்தியை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன்படி, இம்மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 1400 ஏக்கரில் மானாவாரி தீவன சோளம் மிகக்குறைந்த நாட்களில் (60 நாட்களில்) உற்பத்தி செய்வதறகு 50 சதவீத மானியம் அளிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட தீவன பயிர்களை அந்தந்த பகுதி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் கொள்முதல் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக, வறட்சியை கருத்தில் கொண்டு கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோலை கிலோ ரூ.2 விலையில் விற்பனை செய்ய விரைவில் அரசாணை வெளியிடப்பட உள்ளதாக ஆட்சியர் டி.ஜகந்நாதன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், மாவட்டம் முழுவதும் கோ 3, கோ 4 ஆகிய தீவனப்பயிர்கள் அதிகளவில் பயிர் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் விவசாயிகளுக்கு உரிய மானியம் வழங்கப்படும் என்றார் அவர்.

**மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு பேரணி**

சிவகாசி நகராட்சி சார்பில் சனிக்கிழமை மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இதன் தொடக்க விழாவுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் செ. முனுசாமி தலைமை வகித்தார். நகர்மன்றத் தலைவர் வெ.க. கதிரவன், துணைத் தலைவர் கா.அ.அ. அசன்பதுருதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொறியாளர் மா. முத்து வரவேற்றார். செய்தி, விளம்பரம் மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் கே.டி. ராஜேந்திர பாலாஜி சிறப்புரையாற்றி பேசியதாவது: தமிழக முதல்வர் உத்தரவின் பேரில் மழைநீர் சேமிக்கும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே அனைவரும் வீடுகள், கடைகள், தொழிற்சாலைகளில் மழைநீரை சேமிக்க வேண்டும். வீடுகளில் மழைநீர் சேமிக்கப்பட்டால், வீட்டில் உள்ள ஆழ்துளை கிணற்று நீரும் நல்ல தண்ணீராக மாறிவிடும். எதிர்காலத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மழைநீர் சேமிப்பு மிகவும் அவசியமாகும் என்ற அவர் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார் . பேரணி நகரின் பிரதான வீதிகளில் சென்று, மீண்டும் பள்ளி வளாகத்தை அடைந்தது. நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் டி. ராதாகிருஷ்ணன், துணைத் தலைவர் சுப்பிரமணியன், திருத்தங்கல் நகர்மன்றத் துணைத் தலைவர் சக்திவேல், வட்டாட்சியர் மைகேல்ராஜ், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் கலந்துரையாடல்**

கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் தொழில் நுட்பம் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

கொடைக்கானலில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் மண் பல்லுயிரியல்

மற்றும் உயிர் உரங்களின் ஆராய்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் டி.என்.எல்.ராவ் பார்வையிட்டு குளிர் பிரதேச பழங்கள், காய்கறிகள், கொய்மலர்கள் மற்றும் வாசனைத் திரவிய பயிர்களில் நுண்ணுயிரியலின் முக்கியத்துவம் பற்றியும், நுண்ணுயிரியல் கூட்டுப் பொருட்களைக் கொண்டு தோட்டக்கலை பயிர்களில் மகசூலை அதிகரிக்கும் எதிர்கால ஆராய்ச்சி பணிகளைப் பற்றியும் பேசினார்.

இதில், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் பேராசிரியர் இளமுருகு மண் வளத்தினை அதிகரிக்க உயிர் உரங்களின் ஆராய்ச்சி குறித்து பேசினார்.

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத் தலைவர் ஜே. ராஜாங்கம் இந்திய ஒருங்கிணைந்த குளிர் பிரதேச பழங்களின் ஆராய்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் ஆப்பிள், ஆப்ரிகாட், வால்நட், ஆல்மண்ட், பேரி,மற்றும் பீச் பயிர்களில் புதிய ரகங்களை அறிமுகப்படுத்தி ஆய்வு செய்தல், அடர் நடவு முறை பற்றி விளக்கிப் பேசினார். நிகழ்ச்சியில் விஞ்ஞானிகள் செந்தமிழ் செல்வி, சதீஷ், வெற்றிவேல்காளை, முத்துச் செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தேசிய விவசாயிகள் உரிமை பாதுகாப்புஆணையம் அமைக்கக் கோரிக்கை**

மனித உரிமை ஆணையத்தினைப் போல் தேசிய விவசாயிகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்த வேண்டும் என விவசாயிகள் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு திண்டுக்கல் மாவட்டத் தலைவர் கே.லெட்சுமணப்பெருமாள் தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலர் சி.என்.ராஜேந்திரன், மாவட்ட செயலர் எஸ்.பழனிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

திண்டுக்கல் மாவட்ட விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் மேட்டூர் அணையிலிருந்து தனிக் கால்வாய் அமைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளின் உரிமைகளை பாதுகாக்க தேசிய விவசாயிகள் உரிமை

பாதுகாப்பு ஆணையம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் மாவட்ட விவசாயிகள் சங்க பொருளாளர் ஆர்.இளங்கோ, பகுதித் துணைத் தலைவர்கள் டி.நாகராஜன் (கிழக்கு), ஏ.பழனிச்சாமி (மேற்கு), மலைத்தோட்ட செயலர் என்.எஸ்.சீனியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**புதிய தொழில் முனைவோருக்கு ரூ.5.20 கோடி மானியம்**

திருவள்ளூர் மாவட்டத்தில் புதிய தொழில் முனைவோருக்கு ரூ.5.20 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் கோ.வீரராகவராவ் தெரிவித்தார்.

புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான மாவட்ட அளவிலான கருத்தரங்கம் மற்றும் தொழில் தகவல் பரப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்டத் தொழில் மைய மேலாளர் சக்திவேல் வரவேற்றார். ஆட்சியர் கோ.வீரராகவ ராவ் தலைமை வகித்துப் பேசியது: படித்த இளைஞர்களுக்கு உரிய பயிற்சி அளித்து அவர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு, கடந்த ஆண்டு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனம் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஐ.டி.ஐ, பட்டயப்படிப்பு, இளங்கலைப் பட்டம் அல்லது இதற்கு மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். வயது 21-க்கு மேல் 35-க்குள் இருக்க வேண்டும். சிறப்புப் பிரிவினர்களான மகளிர், பட்டியலினத்தோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், முன்னாள் ராணுவத்தினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு அதிகபட்ச வயது 45.

பயனாளி கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். பயனாளியின் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ஏதுமில்லை. தேர்வு செய்யப்படுபவர்களுக்கு ஒரு மாத காலம் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு தொழில் திட்டம் தயாரிக்க உதவி செய்து வங்கிகள் அல்லது தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன் பெற வழிவகை செய்யப்படும்.

இத்திட்டத்தின் கீழ் தொழில் தொடங்கும் தொழில் முனைவோருக்கு தொழில் திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூ.25 லட்சம் வரை மானியமும், 3

சதவீதம் பின்முனை வட்டி மானியமும் அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் ரூ.5 லட்சமும், அதிகபட்சமாக ரூ.1 கோடி வரையிலான அனைத்து உற்பத்தி சார்ந்த தொழில்கள் மற்றும் சேவை தொழில்கள் தொடங்கலாம். பொது பயனாளி தனது பங்காக திட்ட மதிப்பீட்டில் 10 சதவீதம் செலுத்த வேண்டும்.

சிறப்புப் பிரிவு பயனாளி திட்ட மதிப்பீட்டில் 5 சதவீதம் செலுத்த வேண்டும். வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் வாயிலாக கடனுதவி பெற வழிவகை செய்யப்படும்.

இத்திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 2013-14-ஆம் ஆண்டுக்கு 52 புதிய தொழில் முனைவோருக்கு ரூ.5.20 கோடி வரையிலான மானியம் ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாவட்டத் தொழில் மையம், திருவள்ளூர் அலுவலகம் வாயிலாக 17 ஆண்கள் மற்றும் 18 பெண்களுக்கும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாயிலாக 8 ஆண்கள் மற்றும் 9 பெண்களுக்கும் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டம் பெருமளவு தொழில்கள் தொடங்கத் தேவையான வாய்ப்புகளைக் கொண்ட மாவட்டமாக அமைந்துள்ளதால் புதிய தொழில் முனைவோர் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

மாவட்டத் தொழில் மைய மேலாளர் வெங்கடேசன் திட்ட விளக்க உரையாற்றினார். அம்பத்தூர் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக மேலாளர் கிஷோர் குமார், காக்களூர் சிட்கோ கிளை மேலாளர் பூதலிங்கம், இந்தியன் வங்கி முதன்மை மேலாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காளான் வளர்ப்புக் குடில்**

நெய்வேலியில் என்எல்சி தோட்டக் கலைத் துறை சார்பில் காளான வளர்ப்புக் குடில் அமைக்கப்பட்டு, அதை என்எல்சி மனிதவளத்துறை இயக்குநர் சரத்குமார் ஆச்சார்யா வியாழக்கிழமை திறந்துவைத்தார்.

என்எல்சி தோட்டக்கலை மற்றும் நகர நிர்வாகம் ஆகியவை இணைந்து நெய்வேலியில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை உருவாக்கி அதை அமல்படுத்திவருகிறது. அந்த வகையில் மருத்துவ குணம் உள்ள காளான் தாவர வகையை நெய்வேலியில் அமைக்க முடிவு செய்தனர். அதன்படி நெய்வேலி வட்டம் 16-ல் உள்ள அமராவதி நாற்றங்கால் பண்ணையில் புதிதாக காளான் வளர்ப்புக் குடில் ஒன்றை அமைத்துள்ளனர், இந்தக் குடிலை என்எல்சி நகர நிர்வாக பொதுமேலாளர் சக்கரவர்த்தி முன்னிலையில் மனிதவளத்துறை இயக்குநர் சரத்குமார் ஆச்சார்யா வியாழக்கிழமை திறந்துவைத்தார்.

அதேபோன்று நெய்வேலி விமான தளம் அருகே ஒரு ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள சூரியகாந்தி தோட்டத்தையும் சரத்குமார்ஆச்சார்யா திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் என்எல்சி தோட்டக்கலைத் துறை தலைமை மேலாளர்கள் செந்தில்குமார், கோபாலகிருஷ்ணன் மற்றும் ஊழியர்கள் கண்ணன்,முருகேசன், ராமசாமி, பாஸ்கரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**புயல் பாதித்த விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள்**

சிதம்பரம் அருகே பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் டிசம்பர் 11-ம் தேதி தானே புயலால் 47 விவசாயிகளின் 537 தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன. மேற்கண்ட விவசாயிகளுக்கு விழுந்த மரங்களை வெட்டி அகற்றிட ஒரு மரத்துக்கு ரூ.500ம், நடுவதற்கு தென்னங் கன்றுகளும் வழங்கப்பட்டன. மேலும் ஒரு மரத்துக்கு யூரியா 0.650 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 1.0 கிலோ, பொட்டாஷ் 1.0 கிலோ மற்றும் உயிர் உரங்களான ரைசோபிசம், பாஸ்போபாக்டிரியா, தென்னை நுண்ணுரம், உளுந்து சிறுதளை ஆகியன விலையில்லாமல் வழங்கப்பட்டது.

பரங்கிப்பேட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டங்கள்) டாக்டர் க.இளங்கோ கிள்ளை, குறியாமங்கலம் ஆகிய பகுதிகளில் தென்னை பாதித்த விவசாயிகளுக்கு விலையில்லா மணிலா நிறுதளைகள் மற்றும் உயிர் உரங்களை

வழங்கி 2-ம் ஆண்டு நிவாரண பணியை வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார். அதே விவசாயிகளுக்கு யூரியா, சூப்பர்பாஸ்பேட், பொட்டாஷ், உயிர் உரங்களுக்கு உரிய பரிந்துரை விண்ணப்பங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு பி.முட்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என க.இளங்கோ தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் வேளாண் உதவி இயக்குநர் ரமேஷ், வேளாண் அலுவலர் கே.சந்துரு, துணை வேளாண்மை அலுவலர் ஆர்.திருஞானம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். உதவி வேளாண் அலுவலர்கள் ராஜா, பிரான்சிஸ், சின்னமணி ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 01.07.2013

### குறுவை சாகுபடி தடையின்றி தொடரஜப்தி நோட்டீசை நிறுத்த வேண்டும்

தஞ்சாவூர்: ""குறுவை சாகுபடி தடையின்றி தொடரும் வகையில், பயிர்க்கடன், நகைக்கடனை வசூலிக்க, கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகள் ஜப்தி நோட்டீசை விவசாயிகளுக்கு அனுப்புவதை அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும்,'' என இ.கம்யூ., தேசியக்குழு உறுப்பினர் நல்லக்கண்ணு தெரிவித்தார்.அவர் தஞ்சையில் நிருபர்களிடம் கூறியதாவது:டெல்டா மாவட்டங்களில் கடந்த, நான்கு போக விவசாயமும் நடக்காமல் விவசாயிகள் நஷ்டத்தில் தவிக்கின்றனர். இந்நிலையில், பழைய பயிர்க்கடன்களுக்காக, விவசாயிகளுக்கு கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகள் மூலம் ஜப்தி நோட்டீஸ் அனுப்பியிருந்தால், அது தவறு. குறுவை சாகுபடியை சிறப்பாக மேற்கொள்ள, இச்சூழலில் புதிய கடன்களை வழங்கவும், பழைய கடன்களை தள்ளுபடி செய்யவும், தமிழக அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் டெல்டாவில் மட்டுமின்றி, 33 மாவட்டங்களிலும் காவிரி நீரின்றி வறட்சி நிலவியதால், கடந்தாண்டு எப்போதும் இல்லாத வகையில், குறுவை, சம்பா, தாளடி, கோடை பருவ சாகுபடி முற்றிலும் பாதித்தது.நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. ஆனாலும், இறுதி தீர்ப்பு வெளியாகி, ஐந்து ஆண்டுகளாகி விட்டதால், அந்த தீர்ப்பை மறுபரீசீலனை செய்ய வேண்டும் என, கர்நாடகா அரசு வலியுறுத்தி வருகிறது. காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்புப்படி, தமிழகத்துக்கு உரிய நீரை, கர்நாடகா வழங்க வேண்டும்.தமிழகத்தில், குறுவை சாகுபடியை தடையின்றி விவசாயிகள் மேற்கொள்ள, ஜூன், ஜூலை மாதங்களுக்கு உரிய பங்கீட்டு அளவு காவிரி நீரை கர்நாடகா வழங்க வேண்டும். இதை வழங்கும் வகையில், காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை அமல்படுத்த, மத்திய அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.தமிழகத்தில் விவசாயத்தை பாதித்து, விவசாயிகள் வாழ்வாதாரம் பாழாகும்

வகையில், டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தை அமல்படுத்துவது கூடாது. இத்திட்டத்தால் இயற்கை வளம் அழிந்து விடும். விவசாயத்துக்கு பாதிப்பின்றி புதிய தொழில்களை துவங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாய தொழிலாளர்சங்கம் ஆர்ப்பாட்டம்**

வேதாரண்யம்: தேசிய வேலையுறுதித் திட்டத்தில் 150 நாள் பணி வழங்கி, திட்டத்திலுள்ள குறைபாடுகளை களைய வலியுறுத்தி, வேதாரண்யம் பஞ்., யூனியன் அலுவலகம் முன், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.இதில், சங்க ஒன்றிய செயலாளர் அம்பிகாபதி தலைமை வகித்தார். நாகை மாவட்ட செயலாளர் அமிர்தலிங்கம், விவசாய சங்க ஒன்றிய செயலாளர் செங்குட்டுவன், மார்க்.கம்யூ., ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், ஒன்றிய தலைவர் வெற்றியழகன் உள்பட 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில், தேசி ய ஊரக வேலையுறுதி திட்டத்தின்படி, அனைத் து பஞ்.,களிலும் 150 நாள் வேலையும், 148 ரூபாய் சம்பளத்தையும் வழங்க அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலை அளவை 30 கன அடியாக குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

**கோடை மழை ஏமாற்றியதால் கருகிய நெற்பயிர்கள்**

திண்டுக்கல்:திண்டுக்கல் அருகே கள்ளிப்பட்டி பகுதியில் தண்ணீரின்றி நெற்பயிர்கள் கருகியதால், விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது. பருவமழை பொய்த்ததால், கோடைமழையை நம்பி தாமதமாக பயிர்செய்த விவசாயிகளும் தற்போது சிக்கலில் உள்ளனர். கோடை மழை ஏமாற்றியதால், இறவை பாசனத்தை நம்பியும் பாதிக்கப்பட்டுள்ளனர்.கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது. இதனால் பயிர்களுக்கு போதிய அளவு நீர்பாய்ச்ச முடியவில்லை. மேலும் ஆழ்குழாய் கிணறுகளிலும் நிலத்தடிநீர்மட்டம் குறைவால் போதிய அளவு தண்ணீர் இறைக்க முடியாத சூழ்நிலையில், பயிர்களை காப்பாற்ற பலவகைகளில் முயன்றும் விவசாயிகள் தோல்வியையே கண்டுள்ளனர்.திண்டுக்கல் அருகே கள்ளிப்பட்டி பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள், தற்போது முற்றிலும் கருகத்துவங்கிவிட்டன. விளைநிலங்களில் ஈரப்பதமே இல்லாமல் வெடிப்பு தோன்றியுள்ளது. இனி மழை

பெய்தாலும் நெற்பயிர்களை காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயி கவுண்டம்மாள் கூறுகையில்; ""கோடைமழையை நம்பி ஏமாந்துபோயுள்ளோம். ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்தது அனைத்தும் வீணாகிவிட்டது. லாரியில் தண்ணீர் வாங்கி ஊற்றி பயிர்களை காப்பாற்றலாம் என்றாலும், அதற்கும் வழியில்லாத நிலை உள்ளது. விவசாயத்தை நம்பி பணத்தை இழந்துதவிக்கிறோம்," என்றார்.

**வெங்காயத்தை விளைச்சலுக்கு முன் அகற்றிய விவசாயிகள்**

ஆண்டிபட்டி:வைகை அணை நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால்,நீர்த் தேக்கப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட வெங்காயத்தை, விளைச்சலுக்கு முன்பே விவசாயிகள் அப்புறப்படுத்தி வருகின்றனர். வைகை அணை நீர் தேக்கப்பரப்பு 10 சதுர மைல் பரப்பில் பரந்து விரிந்துள்ளது. நீர் வற்றிய காலங்களில், சொக்கத்தேவன்பட்டி, பின்னத்தேவன்பட்டி, சக்கரைப்பட்டி பகுதி விவசாயிகள் நீர் தேக்கப்பரப்பில் விவசாயம் செய்து கொள்வர். நீர் தேக்கப்பகுதியில் படிந்துள்ள வண்டல் விவசாயத்திற்கேற்றதாகும். உரம் ஏதும் இடாமலேயே விளைச்சல் அமோகமாக இருக்கும். கடந்த சில மாதங்களாக அணை நீர் மட்டம் குறைந்திருந்ததால் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் விவசாயிகள் வெங்காயம், காய்கறி சாகுபடி செய்திருந்தனர். இந்த ஆண்டு வெங்காய விலை உச்சத்தில் இருந்ததால், விவசாயிகள் பலரும் வெங்காய சாகுபடி செய்திருந்தனர். தற்போது, அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் சாகுபடி செய்துள்ள நிலங்கள் நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நீர்த் தேக்கப்பகுதியில் சாகுபடி செய்த நிலங்களில் கிடைத்தவரை லாபம் என்பதை உணர்ந்த விவசாயிகள், முழு விளைச்சலுக்கு முன்பே வெங்காயத்தை அறுவடை செய்து வருகின்னர்.

**துவரை பயிர்களை பாதுகாக்க ஆலோசனை**

தேனி:தேனி மாவட்டத்தில் துவரை சாகுபடி அதிகளவில் நடந்து வருகிறது. தற்போது துவரை பூக்கும் பருவத்தில் உள்ளது. இப்பருவத்தில் டி.ஏ.பி., கரைசல் 2 சதவீதம், அதாவது 12.5 கிலோ டி.ஏ.பி.,யை 25 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் கரைக்க வேண்டும். மறுநாள் தெளிந்த நீரை வடித்து 625 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு எக்டேருக்கு கைத்தெளிப்பான் மூலம் பயிர்கள் நனையும் வரை தெளிக்க வேண்டும். இதே போல் பூத்த

15 நாள் கழித்து தெளிக்கவும். இதன் மூலம் அதிகம் விளைச்சல் கிடைக்கும் என விவசாயத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

**கிராம விவசாய மேம்பாட்டிற்கு நீர் வடிப்பகுதி குழு அமைப்பு**

தேனி:தேனி மாவட்ட கிராமங்களில் விவசாயத்தை மேம்படுத்த நீர்வடிப்பகுதி குழு அமைக்கப்பட்டு வருகிறது.தேனி, பெரியகுளம், ஆண்டிபட்டி, சின்னமனூர், கம்பம், க.மயிலாடும்பாறை, போடி, உத்தமபாளையம் ஒன்றியங்களில் தரிசு நிலத்தை மேம்படுத்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு நீர்வடிப்பகுதி குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் இன்ஜினியர், உளவியல், சமூகவியல் நிபுணர்கள், பட்டதாரிகள், விவசாயிகள் உட்பட 10 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர்.குழுவிற்கு ஊராட்சி கிராம சபையில் அங்கீகாரம் பெறப்படுகிறது.நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில் இருந்து கிராமத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த நிதியில் இருந்து தேவையான விவசாய திட்டங்களை இக்குழுவினர் செய்து கொள்கின்றனர். விவசாயத்துறை அதிகாரிகள் திட்ட செயல்பாட்டை கண்காணிக்கும் பணியினை மட்டும் செய்கின்றனர். இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளதால், திட்டம் செயல்படும் கிராமங்களில் நீர்வடிப்பகுதி குழு அமைக்கப்பட்டு வருகிறது.

**கேரளா உள்ளிட்ட பகுதிகளில் தொடர் மழையால் விலை வீழ்ச்சியால் இலவம் பஞ்சு விவசாயிகள்**

போடி:தேனி மாவட்டத்தில் கடந்த 20 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவிற்கு இலவம் பஞ்சு கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் மட்டுமின்றி வியாபாரிகளும் பாதிப்பு அடைந்துள்ளனர்.தேனி மாவட்டத்தில் போடி, குரங்கணி, கொட்டகுடி, வலசத்துறை, வடக்குமலை, வருஷநாடு உள்ளிட்ட பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரில் இலவம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இலவம் விவசாயம் 15 ஆண்டுகளுக்கு முன்பு வரை நன்றாக இருந்தது. அதன் பின்னர் வறட்சி காரணமாக விளைச்சல் இல்லாமல் போனது. தற்போது, வழக்கத்தை விட சீசன் முன்கூட்டியே துவங்கியதோடு, விளைச்சல் அதிகமாகி விட்டன. கடந்த ஆண்டு விளைச்சல் இருந்த நிலையில், துவக்கத்தில் விதை பஞ்சு கிலோ 55 ரூபாயும், சில்லரையில் 45 ரூபாய் வரையும் இருந்தன. சீசன் முடியும் போது, கிலோ 60 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டன.

அரைத்த சுத்தமான இலவம் பஞ்சு கிலோ 180 ரூபாய் வரை விலை போனது. இந்த ஆண்டு விளைச்சல் போதுமான அளவில் இருந்தும், விலை இல்லாமல் போனது. இலவம் காய்கள் வரத்து துவங்கிய நிலையில் இலவம் விதை பஞ்சு 42 ரூபாய் வரையும், சில்லரையில் 35 வரையும் விலை இருந்தன. வரத்து முடியும் நிலையில் தற்போது 35 ரூபாய் வரை விலை உள்ளது. சில்லரையில் 30 வரை விலை குறைந்துள்ளது. மேலும்,தொடர் மழை பெய்து வருவதால், கேரளா, ஈரோடு, பவானி உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து வியாபாரிகளின் வருகை குறைந்துள்ளது. வரத்து இருந்தும், இலவம் விதை பஞ்சு கிலோ 40 ல் இருந்து 33 ரூபாய் ஆக குறைந்துள்ளது. சீசன் துவங்கிய நிலையில் அரைத்த சுத்தமான பஞ்சு 160 ரூபாய் வரை விலை இருந்தது. தற்போது சீசன் முடியும் நிலையில் 130 ரூபாய் என விலை குறைந்துள்ளது. கேரளா பகுதிகளில் தொடர் மழை பெய்வதால் விற்பனையில் பெரும் மந்தம் ஏற்பட்டுள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவிற்கு இலவம் பஞ்சு விலை கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் மட்டுமின்றி, வியாபாரிகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.முத்துராமலிங்கம், இலவம் பஞ்சு உற்பத்தியாளர்,போடி: கடந்த ஆண்டு இருப்பு வைக்கப்பட்ட இலவம் பஞ்சும் இன்னும் உள்ளது. மேலும், கேரளாவில் கடந்த ஆண்டை காட்டிலும் அதிகளவில் மழை பெய்து வருவதால் விற்பனையில் மந்தம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தென்னை நார் கழிவு, மற்றும் "போம்' பஞ்சு மூலம் தயாரிக்கப்படும் ரெடிமேட் மெத்தைகள் அழகிய வடிவங்களாக பிற மாநிலங்களிலிருந்து குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.இதனால் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இலவம் பஞ்சிற்கு விலை குறைந்ததோடு,மெத்தை விற்பனையிலும் மந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**சிங்கம்புணரி ஒன்றியத்தில் மஞ்சள் சாகுபடிக்கு சலுகை**

சிங்கம்புணரி:சிங்கம்புணரி ஒன்றியத்தில் மஞ்சள் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.
இந்த ஒன்றியத்தில் ஜெயங்கொண்டான் நிலை, இ. வலையபட்டி கிராமங்களில் மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.12 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்படுகிறது. மற்ற கிராமங்களிலும் நீர் பாசன வசதியுள்ள விவசாயிகள் நஞ்சை, புஞ்சை நிலங்களில் மஞ்சள் பயிர் செய்தால் எக்டருக்கு ரூ .12 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்படும் என, தோட்டக்கலைத்துறை அறிவித்துள்ளது.

தேசிய மூலிகை பயிர் வளர்ப்பு திட்டத்தின் கீழ், மருத்துவ குணமுள்ள எண்ணை வித்தான, கோலியாஸ் கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ. 5 ஆயிரம் மானியமும், சிறு,குறு விவசாயிகள் காய்கறிகள் பயிர் செய்தால் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ. 43 ஆயிரம் வரை மானியமும் கிடைக்கும்.
தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி பயிர் செய்து பயன் பெறுமாறு சிங்கம்புணரி தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராஜமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**தென்காசி பகுதியில் கார் சாகுபடி பணிகள் தீவிரம்**

குற்றாலம்:மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பருவமழை பெய்து வருவதை அடுத்து கார்சாகுபடி பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதனால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டது. இதனால் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. நெல்லை மாவட்டத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள செங்கோட்டை, தென்காசி, கடையநல்லூர், வடகரை, அச்சன்புதூர், பண்பொழி, மற்றும் சுற்றுப்பகுதிகளில் வறட்சியான நிலையே காணப்பட்டது.அணைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால் நேரடி பாசன நிலங்களும் போதுமான தண்ணீர் இல்லாமல் கருகும் நிலை ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் கடும் வேதனைக்குள்ளாயினர்.இந்நிலையில் கேரளாவில் பருவமழை தீவிரமடைந்துள்ளதை தொடர்ந்து, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை பெய்தது. இதனால் குற்றாலம் அருவிகளில் தண்ணீர் பெருக்கெடுத்தது. மேலும் நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகளிலும் தண்ணீர் படிப்படியாக உயர்ந்தது. மாவட்டத்தில் முதல் முறையாக குண்டாறு அணை நிரம்பியது. நிரம்பி வழியும் குண்டாறு அணையின் நீர்மட்டம் 36.2 அடியாகும். இருப்பினும் இதன் மூலம் பயன்பெறக்கூடிய பாசன நிலங்களில் கார் சாகுபடிக்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.மேலும் தொடர்ந்து மழை பெய்ததால் குற்றால அருவிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக சிற்றாற்றிலும் தண்ணீர் வரத்து ஏற்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து குற்றாலம், இலஞ்சி சுற்றுப்பகுதிகளிலும் கார் சாகுபடி பணிகள் களைகட்ட துவங்கியுள்ளன.
விதைநெல் தட்டுப்பாடு
குற்றாலம், தென்காசி, இலஞ்சி, செங்கோட்டை, கடையநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் கார்சாகுபடி தற்போது மழையின் காரணமாக வேகமாக நடந்து வருகிறது. இந்நிலையில் விதைநெல்லுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள்

கூறுகின்றனர்.அம்பை-16 உள்ளிட்ட முக்கிய நெல் ரகங்களுக்காக விதைநெல் தட்டுப்பாடு சில பகுதிகளில் காணப்படுவதால் தனியார் நிறுவனங்களில் விதை நெல்லை பெறவேண்டிய சூழ்நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. போதுமான விதைநெல் அனைத்து விவசாய மையங்களிலும் பல ரகங்களுடன் இருப்பு வைத்திட மாவட்ட நிர்வாகம் வேளாண்மை துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**மீண்டும் உயிர்பெறுமா மழைநீர் சேகரிப்புதிட்டம்..!**

நான்குவழிச்சாலைக்காக அகற்றப்பட்ட மரங்களுக்கு பதிலாக மர கன்றுகள் நட முன்வருமா அரசு! ஆ அதளபாதாளத்திற்கு செல்லும் நிலத்தடி நீர்
ஆ மழை இல்லையென்றால் தண்ணீர் பஞ்சம் நிச்சயம்ஆ போர்க்கால நடவடிக்கை அவசியம்ஆ முதல்வர் மனது வைத்தால் மட்டுமே விமோச்சனம்
தூத்துக்குடி, ஜுலை 1- தமிழ்நாடு முழுவதும் மீண்டும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை தமிழக அரசு கட்டாயம் செயல்படுத்தவேண்டும் என்றும், நான்குவழிச்சாலைக்காக அகற்றப்பட்ட மரங்களுக்கு பதிலாக மரக்கன்றுகள் நடவேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும் நாளுக்குநாள் குறைந்துவரும் நிலத்தடி நீர் மட்டத்தால் தண்ணீர் பஞ்சம் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகமாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சி தகவல் தெரிவித்துள்ளனர்.
ஒரு நாட்டை பொறுத்தவரை எல்லா வளங்கள் இருந்தாலும் மழைவளமும் கண்டிப்பான தேவையாகும். மழை வளம் இல்லாவிட்டால் என்னஎன்ன பாதிப்புகள் ஏற்படும் என்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயம் தான். என்னதான் நாம் தண்ணீர் எடுத்து ஊற்றி மண்ணை குளிர வைத்தாலும் அது இயற்கையின் கொடையான மழைக்கு ஈடாகாது. மாறிவரும் காலநிலைகள்:தமிழகத்தை பொறுத்தவரை அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழை பெய்யும் காலமாக கணக்கிடப்படுகிறது. கோடை காலம், குளிர்காலம் போன்று மழைக்காலத்தில் மழை பெய்கிறது. ஆனால் தற்போதுள்ள காலகட்டத்தில் செயற்கையின் நிகழ்வுகளால், இயற்கையின் காலச்சூழ்நிலைகளும் அவ்வப்போது மாறி வருகின்றன. மழைக்காலத்தில் மழைபெய்யாமல் வெயில் வாட்டி வதைப்பதும், வெயில் காலத்தில் சுடும் வெயிலுக்கு பதிலாக, மழை வெளுத்து கட்டுவதும் என காலநிலைகளும் சிலநேரங்களில் மாறியபடி நிகழ்ந்துதான் வருகின்றது.ஒவ்வொரு ஆண்டும் காலநிலை இப்படி மாறிக்கொண்டு வந்தாலும் இதைப்பற்றி எல்லாம் யாரும்

எந்த கவலையும் கொள்வதில்லை.

தலைதூக்கும் தண்ணீர் தட்டுப்பாடு...

தமிழகத்தை பொறுத்தவரை மழைக்காலத்தில் என்னதான் பலத்த மழை பெய்தாலும் கோடை காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கமாகி விட்டது. ஏன் மழைக்காலம் முடிந்த ஒரு சில மாதங்களிலே தண்ணீர் தட்டுப்பாடு தலைதூக்குவதும் சகஜமாகி விட்டது. மழைக்காலத்தில் மழையானது அவ்வருடத்தின் குறிப்பிட்ட சராசரி இலக்கை தாண்டித்தான் பெய்கிறது. அப்படி இருந்தும் தண்ணீர் தட்டுப்பாடு தாராளமாய் வந்துவிடுகிறது. யார் எப்படிப்போனால் நமக்கென்ன நமக்கு எல்லாம் தண்ணீர் கிடைக்கிறதா அதுபோதும் என்ற மனப்போக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டு விட்டது. இதுவே ஒரு நாட்டில் ஏற்படும் தட்டுப்பாடுகளுக்கும், விவரிக்க முடியாத விளைவுகளுக்கும் காரணமாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட சூழலில் மழை கொட்டி தீர்ந்து வரும்பட்சத்தில் தமிழகத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டு தலைதூக்குவதற்கு என்ன காரணம்.

தமிழகத்தை பொறுத்தவரை மழைக்காலங்களில் பருவம் தவறிடாத வகையில் ஆண்டுதோறும் மழை குறிப்பிட்ட அளவு பெய்து விடுகிறது. கடந்த ஆண்டுகளை கணக்கிடுகையில் ஆண்டுதோறும் இந்த ஆண்டு இவ்வளவு விகிதத்தில் சராசரி மழையளவு இருக்க வேண்டும் என்று வானிலை ஆய்வு மையத்தினரால் மழையளவின் சராசரி விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த குறிப்பிட்ட இலக்கை பருவமழை பருவம் தவறிடாது பெய்து எட்டிவிடுவதும் உண்டு.

இதுபோக மழைக்காலம் தவிர்த்து சில சமயங்களில் பருவம் தவறிய வகையிலும் பலத்தமழை பெய்து விடுவதும் உண்டு. எதிர்பார்த்த மழை ஏதோ ஒரு பக்கம் குறிப்பிட்ட அளவு சேதத்தை விளைவித்தாலும், எதிர்பாராமல் பெய்யும் மழை எதிர்பார்க்க முடியாத வகையில் பெரும்சேதத்தை விளைவித்தும் விடுகிறது.

மழைக்காலங்களில் அதிகப்படியாக பெய்யும் மழைநீர் பூமியில் உறிஞ்சப்படுகிறது. இதில் மழைநீர் காட்டாறுகள், கால்வாய்கள், குளம், குட்டைகளில், தெருக்களில், ரோடுகளில் தேங்கியது போக மீதமுள்ள மழைநீர் வடிகால் வழியாக பாய்ந்து முடிவில் ஏதாவது ஒரு ஆற்றையோ, வாய்க்காலையோ அடைகின்றன. வாய்க்கால்கள், ஆறுகள் இல்லாத இடங்களில் மழைநீர் சாக்கடையில் சங்கமம் ஆகிவிடுகிறது.

ஆறுகள், வாய்க்கால்களில் சேரும் மழைநீர் ஆற்றில் அணையிருந்தால் அதில் தேவைக்கேற்ப தேக்கப்படுகிறது. ஆற்றில் அணையில்லாத பட்சத்தில் ஆற்றின் வழியாக

கரைபுரண்டு வெள்ளமாக ஓடும். முடிவில் ஏதாவது ஒரு கடலில் சென்று கலந்துவிடுகிறது. தமிழகத்தை பொறுத்தவரை ஆறுகளில் அணை கட்டுவது என்பது பலவருட காலமாக வழக்கத்தில் இல்லாத செயலாகவே இருந்து வருகிறது. அதாவது அரசர்கள், காமராஜர் போன்ற முன்னவர்களின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டுள்ள அணைகளில் தான் தண்ணீர் இன்றும் சேகரிக்கப்பட்டு விவசாயம், குடிநீர் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மணல் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி...

அணை கட்டுவது திட்டம் ஒருபக்கம் இருந்தாலும் தண்ணீர் தட்டுப்பாட்டை தவிர்த்திட முதலில் நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாக்கவேண்டியது மிகமிக அவசியமாகும். ஆனால் என்னதான் மழை கொட்டித்தீர்த்தாலும் மழைக்காலத்தில் சர்ரென்று உயரும் நிலத்தடி நீர்மட்டம் வெயில் காலத்தில் விர்ரென்று அதளபாதாளத்துக்கு சென்று விடுகிறது. நிலத்தடி நீர் மட்டம் குறைவதற்கு காரணம் ஆறுகளில் கணக்குவழக்கு இல்லாமல் நடந்துவரும் மணல்கொள்ளைதான். தமிழகம் முழுவதும் ஆறுகளிலுள்ள மணல்களை எல்லாம் அரசு வெளிமாநிலத்தினருக்கு விற்று லாபம் சம்பாதித்து வருகிறது. நாள்தோறும் நடக்கும் மணல் கொள்ளையால் அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றோர்களின் பணமட்டம் உயர்ந்து வருகிறது. ஆனால் பாவப்பட்ட மக்களோ படுகுழியில் தள்ளப்பட்டு வருகிறார்கள். தற்போதைய சூழ்நிலையில் தமிழகத்திலுள்ள பெரும்பாலான ஆறுகளில் ஆற்றுமணலே இல்லை. ஆற்றுமணல் இல்லாமல் கட்டாத்தரையாக காட்சியளிக்கும் ஆற்றில் மழைவெள்ளம் கரைபுரண்டு ஓடும் பட்சத்தில் மணல் உறிஞ்சி சேமித்து வைப்பதற்கு வழியில்லாமல் போய் விடுகிறது. இதனால் மழைக்காலம் முடிந்த பின்னர் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவது சகஜமாகி விடுகிறது. இந்நிலை மாறிட மணல் பணத்தில் படுத்து தூங்கிக்கொண்டிருக்கும் அரசு விழித்துக்கொண்டு மணல் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

விற்கப்படும் தண் ணீர்...

இன்று எங்கு பார்த்தாலும் தண்ணீர் பாக்கெட்டுகள், பாட்டில்கள் விற்பனை நடப்பது சர்வசாதாரணமாகி விட்டது. தமிழகம் முழுவதும் புற்றீசல்கள் போல தண்ணீர் பாக்கெட் தயாரிப்பு கம்பெனிகள் உதயமாகி வருகின்றன. இத்தண்ணீர் பாக்கெட் தயாரிப்பாளர்கள் பூமியில் பல அடிதூரத்திற்கு ராட்சத போர்களை போட்டு நிலத்தடி நீரை உறிஞ்சி பாக்கெட், பாட்டில்களில் அடைத்து பணம் சம்பாதித்து தங்களின் பாக்கெட்டை நிரப்பிக்கொள்ளுகின்றனர். அதிமாக உறிஞ்சப்படும் தண்ணீரால் பொதுமக்கள்

பாதிக்கப்படுவார்களே என்பதையெல்லாம் இவர்கள் நினைத்து பார்ப்பதில்லை. மினரல் வாட்டர் தயாரிப்பு கம்பெனிகள் தண்ணீரை இப்படி உறிஞ்சி அடைத்து விற்றுவரும் நிலையில் அயல்நாட்டு குளிர்பான கம்பெனிக்காரர்களும் நம்நாட்டுத்தண்ணீரை உறிஞ்சி எடுத்து நம்மிடமே வசூல்வேட்டை நடத்தி வளமான வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். ராட்சத போர்கள், அதிக குதிரை சக்தி கொண்ட மோட்டார்களை இயக்கி நிலத்தடி நீரை ஒரு சொட்டுக்கூட விடாமல் உறிஞ்சி எடுத்து காசு பார்த்து விடுகின்றனர்.
இதுமட்டுமின்றி சிலர் கிணறுகளை அமைத்து அதில் இருந்து கிடைக்கும் தண்ணீரை லாரி, லாரியாக விற்றும், லாபம் சம்பாதித்தும் வருகின்றனர். இப்படியாக மணல் கொள்ளைக்கு அடுத்தபடியாக நிலத்தடி நீரை கொள்ளையடித்து விற்பவர்கள் தமிழகத்தில் அதிகரித்து வருகிறார்கள்.
நீர்நிலைகளை பராமரிக்கவேண்டும்... ஏரி, குளம், குட்டை ஆகியவை தற்போது ஆக்கிரமிப்புகளால் அவை பராமரிப்பு இல்லாமலும் போய் வருகின்றன. பராமரிப்பு இல்லாததால் குளம், குட்டை, ஏரி போன்றவை மேட்டுநிலங்களாக மாறிவருகின்றன. மழைக்கு முன்பாக குளம், குட்டைகளை பராமரித்து மேடுகளை எல்லாம் மண்ணை அள்ளி பள்ளமாக்கி கரைகளை பலப்படுத்தவும், பாதுகாக்கவும் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் யாரும் முன்வருவதில்லை. இதனால் குளம், குட்டை போன்றவற்றில் சேரும் குறைந்த அளவு தண்ணீரும் பல நேரங்களில் பலமில்லாத கரையை உடைத்துக்கொண்டு ஊருக்குள் வெள்ளமாய் பாய்ந்து மக்களை படாதபாடுபடுத்தி யாருக்கும் பயன் இல்லாமல் வீணாகப் போய்விடுகிறது. இந்நிலை மாறிட தமிழகம் முழுவதும் உள்ள குளம், குட்டைகள் பராமரித்திட போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது அரசின் முக்கிய கடமையாகும்.
மீண்டும் வருமா நிலத்தடி நீர் சேகரிப்பு திட்டம்:
தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்துவருவதை கண்டுஅதிர்ச்சியடைந்த ஆராய்ச்சியாளர்கள் தமிழக அரசின் கவனத்திற்கு இந்த விஷயத்தை கொண்டு சென்றனர். அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா தமிழ்நாடுமுழுவதும் உடனடியாக மழைநீர் சேகரிப்புதிட்டத்தை செயல்படுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார். மேலும் மழை நீர் சேகரிப்பு தொட்டி அனைத்து வீடுகளிலும் கட்டாயம் அமைக்கவேண்டும். புதிதாக கட்டப்படும் கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு தொட்டிஅமைக்க பிளான் இல்லையென்றால் அந்த கட்டிடத்திற்கு அப்ரூவல் வழங்க கூடாது என்றும் உத்தரவிட்டார். மேலும் ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளில் மழை நீர் சேகரிப்பு தொட்டி

அமைக்க காலக்கெடு விதித்தும், அவ்வாறு அமைக்காத வீடுகளுக்கு தண்ணீர் இணைப்பை ரத்துசெய்யவும் உத்ரவிட்டார்.

மேலும் தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரியம் மூலம் படித்த இளைஞர்கள் பெண்களுக்கு மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் அவசியம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. பயிற்சி முடித்த பட்டதாரிகள் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் சென்றும் அதன் முக்கியத்துவம் கொடுத்து விளக்க வேண்டும் என்பதற்காக குழுவும் அமைக்கப்பட்டது.

மேலும் தேசிய நெடுஞ்சலைகளில் ஒவ்வொரு ஒரு கிலோ மீட்டருக்கும் இடையில் மழைநீர் சேகரிப்பு கிடங்குகள் அமைக்க உத்தரவிட்டார். அதையாரும் சேதப்படுத்திவிடக்கூடாது என்பதற்காக நெடுஞ்சாலை துறை அதிகாரிகளின் கண்காணிப்புக்கும் உத்தரவிட்டார். ஒவ்வொரு வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டுள்ளது என்று எழுதிவைக்க சொன்னார். இப்படி அதிரடி திட்டங்களால் அப்போது தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. இதனால் தண்ணீர் பஞ்சம் இல்லாமல் தவிர்க்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை சரிவர பெய்யாமல் போனதால் தமிழ்நாட்டில் மீண்டும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவருகிறது. எனவே உடனடியாக தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்த முதல்வர் உத்திரவிட
வேண்டும்.

நான்குவழிச்சாலைக்காக மரங்கள் அகற்றம்:

ஒரு காலத்தில் தூத்துக்குடியில் இருந்து திருநெல்வேலிக்கு சென்றாலோ, மதுரைக்கு சென்றாலோ வழிநெடுக இரண்டு பக்கமும் மரங்கள் ஏராளமாக நிற்கும். ஆனால் தற்போது நான்குவழிச்சாலைக்காக இரண்டு பக்கமும் இருந்த மரங்கள் அடியோடு வெட்டப்பட்டுள்ளது. மழைபெய்ய மரங்கள் அவசியம். வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்று வலியுறுத்தும் அரசு நான்குவழிசாலையில் மீண்டும் மரக்கன்றுகளை நட நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசு உத்தரவிட்டால் போதும் மரக்கன்றுகளை நட எத்தனையோ தன்னார்வலர்கள் இருக்கின்றனர். மீண்டும் நான்குவழிச்சாலைகளில் மரங்கள் ஓங்கிவளரும் நாள் எப்போது..நடவடிக்கைஎடுக்குமா அரசு..

**கொய்மலர் நாற்று நர்சரிதும்மனட்டியில் இன்று துவக்கம்**

நீலகிரி மாவட்டத்தில், தும்மனட்டியில் 1.40 கோடி ரூபாய் செலவில், கொய்மலர் நாற்று நர்சரி இன்று துவக்கப் படுகிறது. நீலகிரி மாவட்டத்தில், 500க்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள், கார்னேஷன் உட்பட கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்க ளுக்கு, தனியார் ஏஜென்சிகள் மூலம் வழங்கப்படும் தாய் செடி கள் தரமற்றவையாக இருப்ப தால், தொழில் நலிவடைந்தது என்ற குற்றச்சாட்டை, நீலகிரி மாவட்ட சிறு, குறு விவசாயிகள் சங்கத்தினர், தோட்டக்கலை துறையினர் மூலம், அரசின் கவனத்துக்கு கொண்டு சென்ற னர். விளைவாக, ஊட்டி தும்ம னட்டி அரசு தோட்டக்கலை பண் ணையில், 1.40 கோடி ரூபாய் செலவில், ஒன்றரை ஏக்கர் பரப் பளவில், கொய்மலர் நாற்று நர்சரி அமைக்க திட்டமிடப்பட்டு, இன்று துவக்க நிகழ்ச்சி நடக்கிறது. "இதன் மூலம், தரமான கொய்மலர் நாற்றுகளை இந்த நர்சரியில் உற் பத்தி செய்து, விவசாயிக ளுக்கு வழங் குவதன் மூலம், மீண்டும் கொய் மலர் சாகுபடி களைகட்டும்' என, திர்பார்க்கப்படுகிறது.

**புதுகையில் தொழில் துவங்க முன்வந்தால்ரூ.25 லட்சம் மானியம்: கலெக்டர் தகவல்**

புதுக்கோட்டை: ""புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் நிறுவனங்கள் துவங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு அரசு சார்பில், 25 லட்சம் ரூபாய் வரை மானியமும், வங்கிகள் மூலம் கடனுதவியும் பெற்றுத்தரப்படும்," என மாவட்ட நிர்வாகம் உறுதியளித்துள்ளது.புதுக்கோட்டையில் மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு திட்டம் தொடர்பான கருத்தரங்கு நடந்தது. இதற்கு தலைமை வகித்து கலெக்டர் மனோகரன் பேசியதாவது:படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் நோக்கத்துடன் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு திட்டம் கடந்த ஆண்டு(2012-13) முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டத்தின் மூலம் தொழில் நிறுவனங்கள் துவங்க முன்வரும் படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிப்பதோடு, தொழில் நிறுவனங்கள் துவங்குவதற்கான திட்ட மதிப்பீடு, அரசு மானியம் மற்றும் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுக்கொடுக்கப்படும்.குறைந்தபட்சம் 5 லட்சம் முதல் அதிகபட்சம் ஒரு கோடி ரூபாய் வரையிலான மதிப்பீட்டில் உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் துவங்க வழிவகை

உள்ளது. திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக 25 லட்சம் ரூபாய் வரை அரசு சார்பில் மானியம் வழங்கப்படும்.தொழில் முனைவோர் பொதுப்பிரிவினர்களாக இருந்தால் திட்ட மதிப்பீட்டில் 5 சதவீதம், சிறப்பு பிரிவினர்களாக இருந்தால் 10 சதவீதம் பங்களிப்பு தொகையாக முதலீடு செய்ய வேண்டும். மீதமுள்ள தொகை வங்கிகள் மூலம் கடனாக பெற்றுத்தரப்படும்.கடந்தாண்டு இத்திட்டத்தின் கீழ் தொழில் துவங்க விருப்பம் தெரிவித்து 11 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இவற்றில் பேப்பர் கப் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தயாரிப்பு தொழில் துவங்க விருப்பம் தெரிவித்த இரண்டு பெண்கள் உட்பட முன்று பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு 13 லட்சத்து, 67 ஆயிரம் ரூபாய் மானியமும், வங்கிகள் மூலம் கடனுதவியும் பெற்றுக்கொடுக்கப்பட்டது.இந்த ஆண்டு புதிய தொழில் முனைவோர்கள் 18 பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு இரண்டு கோடியே, 30 லட்சம் மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஏழு பயனாளிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு 40.50 லட்சம் ரூபாய் மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ராமையா, ஐ.ஓ.பி., மண்டல மேலாளர் மாதவன், சிறு தொழில் அதிபர்கள் சங்கத் தலைவர் பிரதிவிராஜ், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சுப்பிரமணியன், மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் தேவராஜ் உட்பட அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் தொழில் முதலீட்டாளர்கள் பலர் பங்கேற்றனர்.

**அதிக விலை கிடைத்தும் கேழ்வரகு சாகுபடி புறக்கணிப்பு வேளாண் கருவிகள் பற்றாக்குறையே காரணம்**

திருக்கழுக்குன்றம்:போர்ன்விட்டா, ஹார்லிக்ஸ், பூஸ்ட், புரோட்டினெக்ஸ் உள்ளிட்ட ஊக்க பானங்களில், புரதச் சத்து அதிகம். இவற்றை தயாரிக்கும் நிறுவனங்கள், கேழ்வரகை பயன்படுத்தியே, புரதச் சத்து கொண்ட ஊக்க பானங்களை தயாரித்து, விற்பனை செய்கின்றன. மேலும், பல உணவு பொருட்கள், கேழ்வரகையே அடிப்படை ஆதாரமாக கொண்டு தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

ஆர்வமில்லை

இதனால், கேழ்வரகுக்கு சந்தையில் நல்ல விலை கிடைக்கிறது. ஆனால், கேழ்வரகு உற்பத்தி, ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. அதிக விலை கிடைத்தும், கேழ்வரகை பயிரிடுவதில், விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டுவதுஇல்லை.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த, 20 ஆண்டுகளுக்கு முன் நெல்லுடன், கேழ்வரகு, வேர்க்கடலை, கரும்பு போன்ற பயிர்களையும், விவசாயிகள் பயிரிட்டனர். தற்போது, கேழ்வரகு பயிரிடுவது மிகவும் குறைந்துவிட்டது. திருக்கழுக்குன்றம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் மட்டுமே, ஒரு சில விவசாயிகள், கேழ்வரகு பயிர் செய்து வருகின்றனர்.

தமிழகத்தில், 30-40 ஆண்டுகளுக்கு முன், கிராம உணவில்,கேழ்வரகு பிரதான இடத்தை பிடித்திருந்தது. கேழ்வரகு கூழ், களி, கீரை அடை, தேங்காய் அடை, கொழுக்கட்டை, பிட்டு போன்றவை விரும்பி உண்ணப்பட்டது. கேழ்வரகை முளை கட்டி, பின் அதில் இருந்து பால் எடுத்து, குழந்தைகளுக்கு உணவாக கொடுப்பதும், வழக்கத்தில் இருந்தது. நாகரீக மாற்றத்தின் காரணமாக, உணவிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. கேழ்வரகு பின் தள்ளப்பட்டு, அரிசியும், கோதுமையும் உணவில் முக்கிய இடத்தை பிடித்தன. பயன்பாடு குறைந்த நிலையில், மேலும் சில காரணங்களால், கேழ்வரகு உற்பத்தியும் குறைந்துவிட்டது.

இதுகுறித்து, இந்த காலகட்டத்திலும், கேழ்வரகை பயிரிட்டு வரும் அகத்தீஸ்வர மங்கலத்தைச் சேர்ந்த விவசாயி வேணு கூறியதாவது:

எனக்கு சொந்தமான, 30 சென்டில் கேழ்வரகு பயிரிட்டு உள்ளேன்.

மற்ற பயிர்களை போல, இதற்கு அதிகமான செலவு பிடிப்பதில்லை, நடவு செய்யும் பொழுதும், நடவுக்கு பிறகு 20 நாட்களில் இரண்டுமுறை உரமிட வேண்டும்.

தேவைக்கேற்ப நீர் பாய்ச்ச வேண்டும், 90 நாட்களுக்கு பிறகு அறுவடைக்கு தயாராகும். 30 சென்டிற்கு, 4,000 ரூபாய் வரை செலவாகின்றது. 3 மூட்டைகள் கேழ்வரகு கிடைக்கும்.

ஆட்கள் பற்றாக்குறை

இருப்பினும், அறுவைடையான கேழ்வரகு மணிகளை, கதிரில் இருந்து பிரிப்பதில் பெரும் சிக்கல் ஏற்படுகிறது.

முன்பெல்லாம், கேழ்வரகு பயிரை அறுவடை செய்து, குறிப்பிட்ட நாள் உலர வைத்து, பின், மாடுகளை கொண்டு போரடித்து, கதிரில் இருந்து மணிகள் பிரித்தெடுக்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை தற்போது இல்லை.

கேழ்வரகை அறுவடை செய்வது முதல், மணிகளை பிரித்தெடுப்பது வரை அனைத்திற்கும், ஆட்களையே பயன்படுத்த வேண்டி உள்ளது. ஆட்கள் கிடைக்காத காரணத்தினாலும், அறுவடையில் சிரமம் உள்ளதாலும், கேழ்வரகை பயிரிட விவசாயிகள் தயங்குகின்றனர்.

இவ்வாறு, வேணு கூறினார்.

முன்பு, இரவில் கேழ்வரகு கூழை சமைத்து, மறுநாள் காலையில் கரைத்து குடிப்பார்கள். அந்த கால கட்டத்தில் அரிசி விலை அதிகம் என்பதால், கேழ்வரகு, கம்பு போன்றவை அதிகம் பயன்படுத்தப்பட்டன. ஆனால், தற்போது, அரிசி விலைக்கு நிகராக கேழ்வரகும் விலை உயர்ந்து விட்டது. இதனால், அரிசியை அதிகம் பயன்படுத்துகின்றனர். ஆடி மாதத்தில் மட்டும், கோவில்களில் கூழ் வார்த்தல் விழாவிற்காக, கொஞ்சம் கூடுதலாக விற்பனையாகும்.

கோவர்தனன்

மளிகை வியாபாரி,திருக்கழுக்குன்றம்

பல ஆண்டுகளுக்கு முன், கேழ்வரகு முக்கிய உணவாக இருந்தது. இன்றைக்கும், சென்னை உள்ளிட்ட நகரங்களில் கூட, சாலை ஓரங்களில் கேழ்வரகு கூழ் விற்பனை நடந்து வருகிறது. எனவே, தற்போதும் கேழ்வரகினை உணவில் சேர்த்து கொள்ள, மக்கள் விரும்புகின்றனர். ஆனால், விவசாயிகள் தேவைக்கு ஏற்ற அளவிற்கு உற்பத்தி செய்வதில்லை. உற்பத்தியை பெருக்க, விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சரஸ்வதி

இல்லத்தரசி,திருக்கழுக்குன்றம்

கேழ்வரகை பயிரிட விருப்பம் உள்ளது. ஆனால், கூலி ஆட்கள் பிரச்னை பயமுறுத்துகிறது. நடவு முதல் அறுவடை, மணிகளை பிரித்தெடுப்பது வரையில், அனைத்து பணிகளுக்கும் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டால், விவசாயிகள் கேழ்வரகை பயிர் செய்வதில், அதிக ஆர்வம் காட்டுவர். அத்தகைய இயந்திரங்கள் இல்லை என்பதால், விலை அதிகமாக கிடைத்தாலும், விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை.  நைனியப்பன் விவசாயி, இடையூர்

**மின் கம்பிகள் உரசுவதால் மின் தடை விவசாயிகளுக்கு பாதிப்பு**

கும்மிடிப்பூண்டி:முறையாக மின் கம்பிகள் கொண்டு செல்லாததால், அடிக்கடி மின்தடை ஏற்பட்டு விவசாயம் பாதிக்கிறது. சீர் செய்யாமல் அலட்சியம் காட்டி வரும், துணை மின் நிலையத்தின் மீது, அப்பகுதி மக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

கும்மிடிப்பூண்டி அடுத்த, சேகண்யம் கிராமத்தில் விவசாய பயன்பாட்டிற்கும், அப்பகுதி

மக்களுக்காகவும், 100 மற்றும், 250 கிலோவோல்ட் என, இரு மின்மாற்றிகள் உள்ளன. அவை தேவம்பட்டு துணை மின் நிலைய கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இரு மின்மாற்றிகளில் இருந்து, விவசாய நீர் ஏற்று மோட்டார் பயன்பாட்டிற்காக விளை நிலங்கள் மீது செல்லும் மின் கம்பங்கள், ஒரே நேர் கோட்டில் அமைந்துள்ளதால், மேலும் கீழுமாக மின் கம்பிகள் செல்கின்றன.

இதனால், மின் கம்பிகள் கம்பத்துடன் உரசுவதால், அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. இதனால், விவசாய நிலங்களுக்கு குறித்த நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியாமல், விவசாயிகள் பல இன்னலுக்கு ஆளாகின்றனர்.

மேலும், ஆபத்தான முறையில் அந்த வயல் வெளியில் கைக்கு எட்டும் உயரத்தில், மின் கம்பிகள் தாழ்வாக செல்வதால், அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர்.மேற்கண்ட குறைகளை சீர் செய்ய கோரி, சம்பந்தப்பட்ட தேவம்பட்டு துணை மின் நிலைய உதவி பொறியாளர் முதல், பொன்னேரியில் உள்ள செயற் பொறியாளர் வரை, மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என, சேகண்யம் கிராம மக்கள் விரக்தியுடன் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத மின் வாரிய பொறியாளர் ஒருவர் கூறுகையில், "இப்பிரச்னை குறித்து நேரில் ஆய்வு செய்து, உடனடியாக சரி செய்யப்படும்' என, தெரிவித்தார்.

**புதிய தொழில் முனைவோருக்கு ரூ.5.20 கோடி மானியம்**

திருவள்ளூர்:மாவட்டத்தில் புதிய தொழில் முனைவோருக்கு, 5.20 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது என, ஆட்சியர் தெரிவித்தார்.

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான, மாவட்ட அளவிலான கருத்தரங்கு மற்றும் தொழில் தகவல் பரப்புக் கூட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஆட்சியர் வீர ராகவ ராவ் கூட்டத்திற்கு தலைமை தாங்கி, கருத்தரங்கை துவக்கி வைத்தார். மாவட்ட தொழில் மைய மேலாளர் சக்திவேல் வரவேற்றார்.

கருத்தரங்கில் ஆட்சியர் பேசியதாவது:

படித்த இளைஞர்களுக்கு உரிய பயிற்சி அளித்து அவர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்க வேண்டும் என்ற நோக்கோடு, தமிழக அரசு கடந்த ஆண்டு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனம் மேம்பாட்டுத் திட்டம் என்ற

திட்டத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஐ.டி.ஐ., பட்டயப் படிப்பு, இளங்கலை பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். வயது, 21 முதல் 35 வயதுக்குள் இருத்தல் வேண்டும். பயனாளிகள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படுபவர்களுக்கு ஒரு மாதம் தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு தொழில் திட்டம் தயாரிக்க உதவி செய்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் கடன் பெற வழிவகை செய்யப்படும்.

பொது பயனாளிகள் தனது பங்காக திட்ட மதிப்பீட்டில், 10 சதவீதம் செலுத்த வேண்டும். சிறப்பு பிரிவு பயனாளிகள் திட்ட மதிப்பீட்டில், 5 சதவீதம் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், மாவட்டத்தில், 2013-14ம் ஆண்டிற்கு, 52 புதிய தொழில் முனைவோருக்கு, 5.20 கோடி வரையிலான மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆட்சியர் கூறினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட தொழில் மைய மேலாளர் (கடன்) வெங்கடேசன் திட்ட விளக்க உரையாற்றினார்.

**செயற்கை உர தட்டுப்பாடு தடுக்கமாவட்ட நிர்வாகம் நடவடிக்கை**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் செயற்கை உர தட்டுப்பாட்டை தடுக்க கண்காணிப்பு குழு மூலம், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கை:தென்மேற்கு பருவ மழையை ஒட்டி தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது உழவு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் அனைத்தும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை கடைகள் மூலம் விற்கப்படுகிறது.மாவட்டத்தின் தேவைக்கேற்ப உரங்கள் பெற, விற்பனை மற்றும் கையிருப்பு தொடர்பான விபரங்களை, தனிப்பிரிவு மூலம் கண்காணிக்கப்படுகிறது. காரீப், ராபி பருவத்திற்கு தேவையான உரங்கள், சாகுபடி பரப்பளவிற்கு தகுந்தவாறு வேளாண்மை ஆணையரின் அனுமதியின் படி, பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து, நமது மாவட்டத்திற்கு மாதங்கள் வாரியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.பருவத்திற்கு தகுந்தவாறு அனைத்து பயிர்களுக்கும் தேவைப்படும் உரங்கள் விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி கிடைக்க , கண்காணிப்பு பிரிவு மூலம் நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரக்கலப்படத்தை தடுக்க உர மாதிரிகள் எடுக்கப்பட்டு, உரக்கட்டுப்பாட்டு ஆய்வங்களில் சோதனை செய்யப்படுகிறது. அனைத்து உர சில்லரை விற்பனையாளர்களும், உர இருப்பு மற்றும் விலைபட்டியலை விவசாயிகளின் பார்வைக்கு வைக்க வேண்டும்.மேலும் விவசாயின் முகவரி, மொபைல்போன், தொலைபேசி எண் மற்றும் விவசாயின் கையெழுத்தை பெற்ற ரசீது வழங்க வேண்டும். விவசாயிகள் கடைகளில் உரங்கள் வாங்கும் போது, கட்டாயம் அதற்கான ரசீதுகளை கேட்டு பெறவேண்டும்.நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கும், ரசீது இல்லாமல் விற்பனை செய்தல், ரசீதில் முகவரி இல்லாமல் விற்பனை செய்தல் மற்றும் உரங்களை விவசாய பயன்படுகளுக்கு அல்லாமல், தொழிற்சாலை பயன்பாட்டுக்கும், வேறு உபயோகத்திற்கு பயன்படுத்துவது கடும் குற்றமாகும்.இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் உரவிற்பனையாளர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படும். மேலும் தர்மபுரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட உரங்களை மொத்த விற்பனையாளர்கள் வேறுமாவட்டங்களுக்கு விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும்.

அனைத்து விற்பனையாளர்களும் மொபைல் போன் உரகண்காணிப்பு முறையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விற்பனையாளர்கள் உர உற்பத்தியாளர்களிடம் இருந்து தங்களுக்கு கிடைக்கப் பெற்ற உரவிபரங்களை தெரிவிக்க வேண்டும்.மொபைல் போன் உரக் கண்காணிப்பு முறையில் பதிவு செய்து கொள்ளாத விற்பனையாளர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படும். தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் உரம் தொடர்பான பிரச்சனைகளுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் வேளாண்மை அலுவலர், வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு தகவல்களை பெற்று கொள்ளலாம்.அல்லது வேளாண்மை இணை இயக்குனர் அலுவலக, உர கண்காணிப்பு பிரிவுக்கு, 04342-23225 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**வெங்காயத்தை விளைச்சலுக்கு முன் அகற்றிய விவசாயிகள்**

ஆண்டிபட்டி:வைகை அணை நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால்,நீர்த் தேக்கப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட வெங்காயத்தை, விளைச்சலுக்கு முன்பே விவசாயிகள் அப்புறப்படுத்தி வருகின்றனர். வைகை அணை நீர் தேக்கப்பரப்பு 10 சதுர மைல் பரப்பில் பரந்து விரிந்துள்ளது. நீர் வற்றிய காலங்களில், சொக்கத்தேவன்பட்டி,

பின்னத்தேவன்பட்டி, சக்கரைப்பட்டி பகுதி விவசாயிகள் நீர் தேக்கப்பரப்பில் விவசாயம் செய்து கொள்வர். நீர் தேக்கப்பகுதியில் படிந்துள்ள வண்டல் விவசாயத்திற்கேற்றதாகும். உரம் ஏதும் இடாமலேயே விளைச்சல் அமோகமாக இருக்கும். கடந்த சில மாதங்களாக அணை நீர் மட்டம் குறைந்திருந்ததால் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் விவசாயிகள் வெங்காயம், காய்கறி சாகுபடி செய்திருந்தனர். இந்த ஆண்டு வெங்காய விலை உச்சத்தில் இருந்ததால், விவசாயிகள் பலரும் வெங்காய சாகுபடி செய்திருந்தனர். தற்போது, அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் சாகுபடி செய்துள்ள நிலங்கள் நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நீர்த் தேக்கப்பகுதியில் சாகுபடி செய்த நிலங்களில் கிடைத்தவரை லாபம் என்பதை உணர்ந்த விவசாயிகள், முழு விளைச்சலுக்கு முன்பே வெங்காயத்தை அறுவடை செய்து வருகின்னர்.

**கோடை மழை ஏமாற்றியதால் கருகிய நெற்பயிர்கள்**

திண்டுக்கல்:திண்டுக்கல் அருகே கள்ளிப்பட்டி பகுதியில் தண்ணீரின்றி நெற்பயிர்கள் கருகியதால், விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது. பருவமழை பொய்த்ததால், கோடைமழையை நம்பி தாமதமாக பயிர்செய்த விவசாயிகளும் தற்போது சிக்கலில் உள்ளனர். கோடை மழை ஏமாற்றியதால், இறவை பாசனத்தை நம்பியும் பாதிக்கப்பட்டுள்ளனர்.கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது. இதனால் பயிர்களுக்கு போதிய அளவு நீர்பாய்ச்ச முடியவில்லை. மேலும் ஆழ்குழாய் கிணறுகளிலும் நிலத்தடிநீர்மட்டம் குறைவால் போதிய அளவு தண்ணீர் இறைக்க முடியாத சூழ்நிலையில், பயிர்களை காப்பாற்ற பலவகைகளில் முயன்றும் விவசாயிகள் தோல்வியையே கண்டுள்ளனர்.திண்டுக்கல் அருகே கள்ளிப்பட்டி பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள், தற்போது முற்றிலும் கருகத்துவங்கிவிட்டன. விளைநிலங்களில் ஈரப்பதமே இல்லாமல் வெடிப்பு தோன்றியுள்ளது. இனி மழை பெய்தாலும் நெற்பயிர்களை காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயி கவுண்டம்மாள் கூறுகையில்; ""கோடைமழையை நம்பி ஏமாந்துபோயுள்ளோம். ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்தது அனைத்தும் வீணாகிவிட்டது. லாரியில் தண்ணீர் வாங்கி ஊற்றி பயிர்களை காப்பாற்றலாம் என்றாலும், அதற்கும் வழியில்லாத நிலை உள்ளது. விவசாயத்தை நம்பி பணத்தை இழந்துதவிக்கிறோம்," என்றார்.

## வட மாநிலங்களில் கனமழை:குன்னூரில் தேயிலை விற்பனை விறுவிறுப்பு

குன்னூர்:வட மாநிலங்களில் கனமழை பெய்து வருவதால், தமிழக தேயிலையை வாங்க, வர்த்தகர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.வர்த்தக சங்கம்:நீலகிரி மாவட்டம், குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தில், 25வது ஏலம் நடந்தது. 18.23 லட்சம் கிலோ தேயிலை விற்பனைக்கு வந்தது. இதில், 12.72 லட்சம் கிலோ இலை ரகமும், 5.51 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.மொத்தம், 18.23 லட்சம் கிலோவில், 94 சதவீதம், அதாவது, 17.13 லட்சம் கிலோ தேயிலை விற்பனை செய்யப்பட்டது. கிலோவுக்கு, 1 ரூபாய் கூடுதல் விலை கிடைத்தது.இலை ரகம், சராசரியாக கிலோவுக்கு, 70 முதல் 75 ரூபாய் வரையிலும், உயர் ரகம், 115 ரூபாய் முதல், 150 ரூபாய் வரையும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை, 79 ரூபாய் முதல், 86 ரூபாய் வரையும், உயர் வகை, 120 ரூபாய் முதல், 160 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டது. சி.டி.சி., ரகம் அதிகபட்சமாக, ஒரு கிலோ, 174 ரூபாய்க்கும், டஸ்ட் ரகம் அதிகபட்சமாக, 220 ரூபாய்க்கும் விற்பனையானது. அடுத்த ஏலத்துக்கு மொத்தம், 18.87 லட்சம் கிலோ தேயிலை விற்பனைக்கு தயாராக உள்ளது.கடந்த வாரம் மொத்தம், 14.85 லட்சம் கிலோ தேயிலை விற்பனையானது. சராசரியாக கிலோவுக்கு, 90.45 ரூபாய் வீதம், 13.46 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது. சராசரி விலை, 90.65 ரூபாயாக இருந்தது. இந்த வாரம் கூடுதலாக, 74 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. இதே போல, அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்திலும், விற்பனை அதிகரித்து உள்ளது. விற்பனைக்கு வந்த, 4.90 லட்சம் கிலோவில், 90 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.போக்குவரத்து:வட மாநிலங்களில், தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும், ஒரு சில இடங்களில் சாலை போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தேயிலை வர்த்தகர்கள், தமிழகம் நோக்கி வருவதால், குன்னூர் தேயிலை மையங்களில் விற்பனை அதிகரித்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.07.2013**

## கர்நாடக அணைகளின் உபரிநீரால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2 நாட்களில் 17அடி அதிகரிப்பு



மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 2 நாட்களில் 17 அடி அதிகரித்துள்ளது. இந்நிலையில், கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த கனமழையால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர், ஹேமாவதி, ஹேரங்கி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த அணைகள் நிரம்பும் நிலையில் உள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அணைக்கு வரும் உபரி நீர் காவிரியில் திறந்து விடப்பட்டது.

இந்நிலையில், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று காலை 38,547 கனஅடியாக இருந்தது. குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 1001 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் நீர் இருப்பு 10.40 டிஎம்சியாக உள்ளது. கடந்த 28ம் தேதி 19.59 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 36.60 அடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2 நாளில் 17 அடி அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கர்நாடகாவில் மழை குறைந்துள்ளதால், கர்நாடக அணைகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து படிப்படியாக குறையத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டூர் அணைக்கு வரும் நீரின் வேகமும் குறையத் தொடங்கியுள்ளதால் மீனவர்கள் அணையில் மீன் பிடிக்க

துவங்கியுள்ளனர்.

மேட்டூர் அணையில் தற்போதுள்ள தண்ணீர் குடிநீர் தேவைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. நீர்மட்டம் 90 அடியை எட்டினால் மட்டுமே டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியும். ஜூன் மாதத்தில் தமிழகத்திற்கு கர்நாடகா 10 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும். ஆனால், உபரி நீர் மட்டுமே தற்போது வந்துள்ளது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் படி, கர்நாடகா விட வேண்டிய தண்ணீரை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிலிகுண்டுலுவில் நீர்வரத்து சரிந்தது

கர்நாடகாவில் இருந்து தமிழகத்துக்கு காவிரியில் வரும் நீர் இரு மாநில எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீராணைய அதிகாரிகளால் அளவிடப்படுகிறது.

பிலிகுண்டுலுவில் நேற்று முன்தினம் மாலை விநாடிக்கு 36,750 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 9.30 மணி அளவில் வினாடிக்கு 34,058 கனஅடியாக குறைந்தது.

**சாகுபடி பரப்பு சுருங்கியது உற்பத்தி குறைந்ததால் மிளகு ஏற்றுமதி கடும் சரிவு**



திருவனந்தபுரம் : மிளகு ஏற்றுமதியில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. நாட்டில் தமிழகம், கேரளா, கர்நாடகா மாநிலங்களில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் ‘கருப்பு தங்கம்’ என வர்ணிக்கப்படும் மிளகு அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பருவ நிலை மாற்றம் உள்பட பல்வேறு காரணங்களால் மிளகு சாகுபடி பரப்பளவு கடந்த 10 ஆண்டுகளில் வெகுவாக குறைந்து வருகிறது.

கடந்த 2001ம் ஆண்டில் இந்த மாநிலங்களில் மொத்தம் 2 லட்சத்து 18,670 எக்டேரில் மிளகு சாகுபடி செய்யப்பட்டது. இது 2010ம் ஆண்டில் 1 லட்சத்து 82,000 எக்டேராக குறைந்து விட்டது. அதே சமயம், வியட்நாம், சீனா போன்ற நாடுகளில் இதே காலத்தில்

சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளன. இதனால், இந்திய மிளகு ஏற்றுமதி சரிவை கண்டுள்ளது. ஒரு காலத்தில் மிளகு ஏற்றுமதியில் முன்னணி வகித்த இந்தியா, தற்போது அந்த பெருமையை இழந்து வருகிறது.

கடந்த 2000ம் ஆண்டில் நாட்டில் 79,000 டன் மிளகு உற்பத்தியானது. இது 2010ம் ஆண்டில் சுமார் 50,000 டன்னாக குறைந்துள்ளது. அதே போல், கடந்த 2010,11ம் ஆண்டில் 26,700 டன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 2011,12ம் ஆண்டில் வெறும் 16,000 டன்னாக குறைந்தது. இது குறித்து, ஸ்பைசஸ் போர்டு அதிகாரி ஒருவர் கூறுகையில், 'மிளகு உற்பத்தி குறைவதை தடுக்க மத்திய அரசு சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மூலம் மிளகு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களில் சலுகைகள் அளிக்கப்படுகிறது' என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 01.07.2013

### கொள்முதல் விலை உயர்வு பருப்பு, எண்ணெய் வித்து உற்பத்தி உயர வாய்ப்பு

சுதானுகா கோசல்

கொல்கத்தா

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு, 2013–14 பருவத்திற்கு பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களுக்கான கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளது. மேலும் நாடு முழுவதுமாக நல்ல மழை பெய்துள்ளது. இதனால் கரீஃப் பருவ (ஜூன்–அக்டோபர்) பயிர்கள், குறிப்பாக பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.எண்ணெய் வித்துக்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 13 சதவீதத்திற்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளது. எனினும் நெல் கொள்முதல் விலை 4.8 சதவீத அளவிற்கே அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2012–13 பருவத்தில் நெல் கொள்முதல் விலை 15.7 சதவீதம் உயர்த்தப்பட்டிருந்தது.உளுந்து, கேழ்வரகு உள்ளிட்ட ஐந்து பயிர்களுக்கு மட்டும் கொள்முதல் விலை உயர்த்தப்படவில்லை. மற்றபடி அநேகமாக அனைத்து கரீஃப் பயிர்களுக்கும் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. எனவே நடப்பு பருவத்தில் வேளாண் உற்பத்தி சிறப்பாக இருக்கும் என மத்திய அரசு வட்டாரங்கள் நம்புகின்றன.கடந்த ஆறு ஆண்டுகளில் வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை சராசரியாக 15 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 5 சதவீத அளவிற்கே ஆதரவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் இது உணவு பணவீக்கத்தில் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது என ஜப்பானிய தரகு நிறுவனமான நோமுரா தெரிவித்துள்ளது.